முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1618

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.03.2024,** திங்கட்கிழமை

1. அருள்வடிவாக நின்று இந்த பேருலகிலே
ஆற்றல்பட ஞானம் எளியவர்க்கும் அருளி
பொருள்வளம் அருள்பலம் புண்ணியபலமாக
பூவுலகோர் சகல வளம் சிறந்தோங்க
2. ஓங்கவே அற்புதம் நடத்துகின்ற
ஓங்கார ஞானியே ஆறுமுக அரங்கனே
இங்கணமே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் மாசி மாதம் 21 ம் நாள், 04.03.2024, திங்கட்கிழமை)

3. ஆசியதும் அரங்கன் உன் அவதாரம்
ஆறுமுகன் என் சூட்சுமமாக இருக்க
இருக்கவே கலியுகத்தார் உனைகண்டு
இணைந்து ஆன்மீக அறப்பணி சேவை ஆற்றி
4. ஆற்றல்பட ஓங்காரக் குடிலோடு
அருளுவேன் தொடர்ந்து இணைந்து களப்பணி
களப்பணி கண்டு உலகினிலே
கலியுகத்தார் ஞான பலம் பெற்றுவிட்டால்
5. பெற்றவர்க்கு பிரணவ சித்தியாக
பிரணவக்குடிலில் இருந்து மகா சக்தி
ஆற்றல்பட இறங்கி பாதுகாப்பு
அழியாமை அவரவர்கள் பெறும் வண்ணம்
6. வண்ணமுடன் அரங்கன் உன் ஞானத்தால்
வையகத்தில் அற்புதம் நடக்கக்கூடும்
கூடுகின்ற இந்த மகா சக்திவழிதான்
குவலயம் எங்கும் ஞான உலகமாற்றம்

7. நாடெங்கிலும் நடந்தேறி இனிதே
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி
ஞான சித்தர் காலமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–